## சந்திர பகவான்

எங்கள் குறைகள்
எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி,
திருவருள் தருவாய்
சந்திரா போற்றி...
சத்குரு போற்றி
சங்கடந் தீர்ப்பாய்
சதுரா போற்றி

## சுக்ர பகவான்

சுக்கிரமூர்த்தி
சுபமிக ஈவாய்
வக்கிரமின்றி
வரமிகத் தருவாய்
வெள்ளிச் சுக்கிர
வித்தக வேந்தே
அள்ளிக்
கொடுப்பாய்
அடியார்க்கருளே

## புத பகவான்

இதமுற வாழ
இன்னல்கள் நீக்கு
புத பகவானே
பொன்னடி போற்றி
புதந்தந் தாள்வாய்
பண்ணொலியானே
உதவியே அருளும்
உத்தமா போற்றி

## அங்காரக பகவான்

சிறப்புறு மணியே
செவ்வாய்த்தேவே
குறையிலாது
அருள்வாய்
குணமுடன் வாழ
மங்களச் செவ்வாய்
மலரடி போற்றி
அங்காரகனே
அவதிகள் நீக்கு

## சூரிய பகவான்

சீலமாய் வாழச்
சீரருள் புரியும்
ஞாலம் புகழும்,
ஞாயிறே போற்றி
சூரியா போற்றி,
சுதந்திரா போற்றி
வீரியா போற்றி,
வினைகள்
களைவாய்

## குரு பகவான்

குணமிகு வியாழக்
குரு பகவானே
மணமுடன் வாழ
மகிழ்வுடனருள்வாய்
ப்ருகஸ்பதி
வியாழப் பரகுரு
நேசா
க்ரகதோஷம் இன்றிக்
கடாக்ஷித்தருள்வாய்

## ராகு பகவான்

அரவெனும் ராகு
அய்யனே போற்றி
கரவா தருள்வாய்
கஷ்டங்கள் நீக்கி
ஆகவருள்புரி
அனைத்திலும்
வெற்றி
ராகுக்கனியே
ரம்மியா போற்றி

## சனி பகவான்

சங்கடந் தீர்க்கும்
சனி பகவானே
மங்களம் பொங்க
மனம்வைத்தருள்வாய்
சச்சரவின்றிச் சாகா
நெறியில்
இச்சகம் வாழ
இன்னருள் தா தா

## கேது பகவான்

கேதுத் தேவே
கீர்த்தித் திருவே
பாதம் போற்றி
பாபம் தீர்ப்பாய்
வாதம், வம்பு
வழக்குகள் இன்றி
கேதுத் தேவே
கேண்மையாய் ரக்ஷி